# "விவசாயிகளிடம் கடனைத் திருப்பிகேட்க வேண்டாம்"

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 304
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 27 ரம்ழான் 10 புதன்கிழமை (13-12-67)

## உணவுமந்திரியிடம் ஜி. ஜி. கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் வழங்கிய கடன்களை திருப்பி பெற வேண்டாமென யாழ்ப்பாண எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் உணவு மந்திரி திரு எம். டி. பண்டாவிடம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் பெரும்பகுதியான விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளதாகவும், பல ஏக்கர் நெற்பயிர் நாசமடைந்ததாகவும், இதனுல், விவசாயிகள், பெருத்த நஷ்டமடைந்துள்ளதாகவும். யாழ்ப்பாண எம். பி. தெரிவித்துள்ளார்.

காலபோகத்திற்காக கொடுக்கப்பட்ட எந்தவித

5-ம் பக்கம் பார்க்க

### மழை — வெள்ளம் — பேய்க்காற்று

# யாழ். மாவட்டத்தில் 40,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன

## இம்மாத முடிவுக்குள் முதல் பகுதி உதவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் பகுதியாக இம்மாத இறுதிக்குள் நிவாரண உதவிகள் வழங்கப்படுமென்று சமூக சேவைப் பகுதி உப அதிபர் திரு. என். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 40.000 குடும்பங்கள்பாதிக்கப்பட்டிருப்பதாகவும்இவர்களைப் பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிப்பதற்கு கிராம சேவகர்களுக்கு உதவியாக ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுகளிலும். மேலதிக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவிருக்கிருர்களென்றும் தெரிய வருகிறது.

கிராம சேவகர்களும், இந்த உத்தியோகத்தர்களும் வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டு, சேதத்தை மதிப்பிட்டு, புள்ளி விபரங்கள் தயாரிப்பார்கள். அதன்பின் அந்தந்தப்பகுதிக் காரியாதிகாரி முழு விபரங்களையும் சேகரித்து சமூகசேவை பகுதிக்கு நிவாரணம்பெறும் பொருட்டு அனுப்பிவைப்பார்.

சேதமடைந்த வீடுகளைப் பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கும் வேலைகளை நேற்று முதல் பல கிராம சேவகர்கள் ஆரம்பித்துள்ளனர்.

## முழுவிபரமும் விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் முழு விபரங்களும். இதுவரை கிடைக்கவில்லையென்று உதவி ஆரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார்.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும், அந்தந்தப் பகுதி கிராம சேவகர்கள் புள்ளி விபரங்களைத் தயாரித்துவருவதாகவும். அதன்பின் காரியாதிகாரிகள் மூலம் இவ்விபரங்கள் தயாரிக்கப்படும் என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

வெள்ள அகதிகளுக்கு இருப்பிடம், உணவுப் பொருள்கள்வழங்குவதிலும் கிராமசேவகர்கள் நாள்முழுதும்பாடுபட்டுவருகிருர்கள் என்றும், காரியாதிகாரிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்துவருகிருர்களென்றும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வீடுகளை இழந்தவர்களின் புள்ளி விபரங்களை சிலபகுதி கிராமசேவகர்கள்சேகரித்து வருவதாகவும், இம்மாத இறுதிக்குள் முழுவிபரமும் தெரிந்துவிடுமென்றும்அவர் தெரிவித்தார்.

## ரஷ்ய இராணுவ பலம்

பிரசல்ஸ், டிசெ. 12

வட அத்லாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் ரஷ்யாவின் சமீபத்தைய இராணுவ அபிவிருத்திகள் பற்றி விவாதித்தன. மத்தியதரைக் கடலில் ரஷ்ய கடற்படை வலுப்படுத்தப்படுவதையும், நீண்ட தூர ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதையும் அத்லாந்திக் நாடுகள் கவலையுடன் அணுகின.

வளர்ந்து வரும் ரஷ்யாவின் இராணுவ பலத்துக்கு எதிராக ஐக்கிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

## வடிகால்திட்டம் அமைப்பது அவசியம்

### என்ஜினியர் குழுவை அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு உடனடியாக ஓர் என்ஜினியர் குழுவை அனுப்பிவைக்கும்படி யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பொதுவேலைப்பகுதி மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவை கோரியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும், சில பகுதிகளில் வெள்ள நீர் வடியாமல் தேங்கி நிற்பதாகவும், வெள்ளநீரை கடலுக்குள் பாய்ச்சுவதன் மூலமே மக்களை வெள் அபாயத்திலிருந்து காப்பாற்றமுடியுமென்றும் அவ தெரிவித்துள்ளார்.

வெள்ளம் வடியுமுன்னர் என்ஜினியர் குழு, இவ்விடம் வந்து யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதையும் நேரில் பார்வையிடவேண்டுமென்றும் யாழ்ப்பாண எம். பி. தெரிவித்துள்னார்.

இன்ஜினியர் குழு, யாழ்ப்பாணக்குடாநாட்டை பார்வையிட்டு, ஒரு புதிய வடிகால்திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமென்றும் அவர் மந்திரியிடம் தெரிவித்துள்ளார்.

## வெள்ளப்பகுதிகளை யாழ். எம். பி. பார்த்தார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்றுக்காலை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவை சந்தித்து வெள்ள அகதிகளின்நிலைமைபற்றி ஆராய்ந்தார்.

யாழ்ப்பாண எம். பி. அரசாங்க அதிபர் காரியாதிகாரி ஆகியோர்களுடன் நேற்றுக்காலை யாழ்ப்பாணப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார். பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களை சந்தித்த யாழ்ப்பாண எம். பி. அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மூன்று பகுதிகள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாணம், தென்மராட்சி, வலிகாமம் ஆகிய மூன்று இடங்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இப்பகுதிகளிலிருந்து அதிகமானேர் வெளியேறியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கிளிநொச்சிப் பகுதியில் அதிக சேதம் ஏற்படவில்லை என்றும், தற்பொழுது வெள்ளம் வடிந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 40,000 குடும்பங்கள் வீடிழந்துள்ளன. இவர்களில் 60 சத விகிதமானேர் பாடசாலைகளிலும் கோவில்களிலும் [illegible]

8-ம் பக்கம் பார்க்க

## வெங்காயம் செய்கைபண்ணிய விவசாயிகளுக்கு உதவவேண்டும்

### தீவுப்பகுதி எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சுமார் இரண்டு மாத காலத்துக்கு இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் தீவுப்பகுதியின் வெங்காயப் பயிர்ச்செய்கையை வெள்ளம் முற்ருக [illegible] தீவுப்பகுதியின் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள், அவ்விவசாயிகளுக்கு மனத்திருப்தியும், மீண்டும் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஊக்கமும் ஏற்படும் பொருட்டு நிவாரண நிதி அளிக்கும்படி தீவுப் பகுதி எம். பி, திரு. வி. நவரத்தினம் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகராவிடம் கேட்டுள்ளார்.

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்காவிட்டால் நாடு முழுவதற்கும் இவ்வருட தேவையானவெங்காயத்தை வடபகுதி பூர்த்திசெய்திருக்குமென்றும் முசுந்பத்து மாதத்துக்கும் ஏனைய பகுதி

8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968-ம் வருடத்து மங்களகரமான

# மெய்கண்டான் திருக்குறட் கலன்டர், டயறிகளின் விலை விபரங்கள்

## கலன்டர்கள்

''மெய்கண்டான்''

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | திருக்குறட் கலன்டர் NO 1 ஸ்பெஷல் | 2 40 |
| 2. | திருக்குறட் கலன்டர் NO 1 சிவப்பு | 2 25 |
| 3. | திருக்குறட் கலன்டர் NO 1 B கறுப்பு | 2 15 |
| 4. | சிங்கள கலன்டர் NO 1 கலன்டர் அளவுள்ளது | 2 15 |
| 5. | நன்மொழிக் கலன்டர் NO 2 | 1 40 |
| 6. | இரு கலர் இங்கிலிஷ் கலன்டர் போஸ்ரர் பேப்பர் | 3 00 |
| 7. | ஒரு தேதி கலன்டர் NO 3 | 85 |
| 8. | மாதக் கலன்டர் பஞ்சாங்கக் கலன்டர் | 85 |
| 9. | ரேல் கலன்டர் இனும் கொடுக்கத் தகுந்தது | 30 |
| 10. | ரேபிள் கலன்டர் பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன் | 5 50 |
| | ,, ,, றீபில் (Refills) மட்டும் | 4 00 |
| 11. | A ஆபீஸ் கலன்டர் (5'' X 7¼'') [அழகிய வெள்ளை பாங்க் காகிதத்தில் அச்சிடப்பட்டது] | 5 75 |
| 11. | B ஆபீஸ் கலன்டர் (5'' X 7¼'' [சாதாரண வெள்ளை நியூஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது] | 4 75 |
| 12. | தகரப் படம் அழகிய பலமாதிரிகள் | 2 75 |

## பிளாஸ்ரிக் டயறிகள்

''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 13. | NO 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி பிளாஸ்ரிக் கவருடன் | 2 75 |
| 14. | NO 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி | 2 20 |
| 15. | NO 2 பிளாஸ்ரிக் திருக்குறள், சினிமா டயறி | 2 75 |
| 16. | NO 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3 60 |
| 17. | NO 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2 20 |
| 18. | NO 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1 75 |
| 19. | NO 6 பிளாஸரிக் பிஸனஸ டயறி 'A' பக்கம் 1 நாள் | 3 85 |
| 20. | NO 7 ,, ,, ,, 'B' பக்கம் 2 நாள் | 3 30 |
| 21. | NO 8 அலுவலக (Official) டயறி பிளாஸ்ரிக் கவர் | 3 55 |
| 22. | ஜெம் பிளாஸரிக் டயறி | 1 85 |
| 23. | புறெபெஷனல் பாக்கெட் டயறி (Appointments) | 3 30 |

## பேர்ஸ டயறிகள்

''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 24. | NO 1 பேர்ஸ தமிழ் டயறி பேர்ஸ் சகிதம் with Purse | 3 70 |
| 25. | NO 2 பேர்ஸ திருக்குறள் டயறி ,, ,, | 3 15 |
| 26. | NO 4 பேர்ஸ இங்கிலிஷ் டயறி ,, ,, | 3 15 |
| 27. | NO 5 பேர்ஸ இங்கிலிஷ் டயறி ,, ,, | 2 75 |
| 28. | NO 6 பேர்ஸ் பிஸனஸ 'A' டயறி பக்கம் 1 நாள் | 4 95 |
| 29. | NO 7 ,, ,, 'B' டயறி பக்கம் 2 நாள் | 4 40 |
| 30. | NO 8 அலுவலக (Official) டயறி பேர்ஸ் சகிதம் | 5 25 |
| 31. | ஜெம் பேர்ஸ டயறி | 2 75 |
| 32. | புறெபெஷனல் பாக்கெட் பேர்ஸ் டயறி | 4 15 |
| 33. | வலற் டயறி Wallet Diary - மிகச் சிறந்தது | 6 50 |
| 34. | புறெபெஷனல் பேர்ஸ (Appointments) டயறி 7¼'' X 9¾'' | 9 00 |
| 35. | பேர்ஸ நியமன (Appointments) டயறி | 8 50 |

## தங்கநிற (Rolled Gold) பூட்டுடன் கூடிய பேர்ஸ் டயறிகள்

''மெய்கண்டான்''

| | | | |
|---|---|---|---|
| 36. | NO 2 திருக்குறள் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 25 |
| 37. | NO 2 திருக்குறள், சினிமா டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 75 |
| 38. | NO 4 இங்கிலிஷ் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 4 25 |
| 39. | NO 5 இங்கிலிஷ் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 3 75 |
| 40. | ஜெம் டயறி | பூட்டுடன் பேர்ஸ் | 3 85 |

## பெரிய டயறிகள்

(டாக்டர், வக்கீல், பெரிய வர்த்தகர்களுக்கு உகந்தது)

''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 41. | நியமன (Appointments) டயறி பக்கம் 1 நாள் (கலிக்கோ) | 4 70 |
| 42. | பிளாஸரிக நியமன (Appointments) டயறி | 5 50 |
| 43. | பிளாஸரிக் டாக்டர் (Appointments) டயறி | 6 00 |
| 44. | புறெபெஷனல் பிளாஸரிக் (Appointments) டயறி 7¼'' X 9¾'' | 7 00 |
| 45. | புல்ஸ்காப் டயறி (கலிக்கோ) | 15 00 |

## சிங்கள டயறிகள்

''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 46. | சிங்கள பாக்கெட் டயறி (கலிக்கோ பைன்ட்) | 1 65 |
| 47. | பிளாஸரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2 20 |
| 48. | பேர்ஸ சிங்கள டயறி | 3 30 |
| 49. | சிங்கள பஞ்சாங்க 'A' டயறி (Plastic) பக்கம் 1 நாள் | 3 85 |
| 50. | சிங்கள பஞ்சாங்க 'B' டயறி (Plastic) பக்கம் 2 நாள் | 3 30 |

## சாதாரண டயறிகள் (கலிக்கோ பைன்ட்)

''மெய்கண்டான்''

| | | |
|---|---|---|
| 51. | NO 1 தமிழ் டயறி (கலிக்கோ பைன்ட்) | 2 15 |
| 52. | NO 2 திருக்குறள் டயறி (கலிக்கோ பைன்ட்) | 1 65 |
| 53. | NO 2 சினிமா டயறி | 2 15 |
| 54. | NO 3 டெஸக் டயறி (கலிக்கோ பைன்ட்) | 2 75 |
| 55. | NO 4 இங்கிலிஷ் டயறி (கலிக்கோ பைன்ட்) | 1 65 |
| 56. | NO 5 இங்கிலிஷ் டயறி | 1 15 |
| 57. | NO 6 பிஸனஸ 'A' டயறி (பக்கம் 1 நாள், கலிக்கோ பைன்ட்) | 3 00 |
| 58. | NO 7 பிஸனஸ 'B' டயறி (பக்கம் 1 நாள், கலிக்கோ பைன்ட்) | 2 50 |


## வரி விளம்பரம்

### தேவை

வீடு

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுமுள்ள வீடு 1968-ம் ஆண்டு தை மாதம் முதல் வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ளும் விலாசம்:- சு. இரத்தினசிங்கம், 91, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2169

வெல்டர்

திறமை வாய்ந்த எலக்றிக் வெல்டர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வ. பஞ்சாட்சரம், ஸ்ரீ முருகன் வெல்டிங், 46, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 2171

### விற்பனைக்கு

நாய்க்குட்டி!

உயர்ந்த ரக [Pedigree] அல்ஸேஷியன் நாய்க்குட்டி, [ஆண்] விற்பனைக்குண்டு. விலை ரூபாய் 75/- முதலில் வருபவருக்குக் கொடுக்கப்படும். மேதர், 18 சாப்பல் தெரு, யாழ்ப்பாணம். 2172

காங்கேசன்துறை

பட்டின சங்கம்

## கேள்விப் பத்திர விளம்பரம் 1968

மேற்படி காங்கேசன் துறைப் பட்டின சங்கத்திற்குச் சொந்தமான, காங்கேசன்துறைப் பொதுசன சந்தைக்குள் இருக்கும் 1-ம், 2-ம் இலக்கமுடைய மாட்டிறைச்சிக் கடைகள் கேள்விப் பத்திரங்கள் மூலம் 1968-ம் ஆண்டிற்கு குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் சபையினால் அதற்கென வழங்கப்படும் நகல், பத்திரங்களில் நிரப்பப் பெற்று, இணைப்பிரதிகளாக அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் யாவும் 18-12-67-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகச் சபை அலுவலகத்தில் ரூபா 25/- பிணைப்பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி 12 மணிக்கு முன்னதாகச், சீல் வைத்த காயிதக் கோவையில், இடது பக்கத்தில் ''மாட்டு இறைச்சிக்கடை கேள்விப்பத்திரம்'' என எழுதப்பெற்று தலைவர் பட்டினசபை, காங்கேசன்துறை என்ற விலாசத்திற்கு விலாசமிடப்பட்டு சபையில் வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப்பெட்டியிலோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ சபை அலுவலகத்தில் சேரும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பத்தினையோ, அன்றேல் எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமின்றி நிராகரிக்கவோ அன்றேல் ஏற்றுக் கொள்ளவோ சபைக்கு உரிமையுண்டு.

மேற்கொண்டு விபரங்களை தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்  
ஆ. வ. சதாசிவம்.  
தலைவர்,  
காங்கேசன்துறை,  
பட்டின சங்கம்.

பட்டின சங்க அலுவலகம்,  
காங்கேசன்துறை,  
4-12-1967.

365

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் P/948.

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கு, மொகமெட் சுல்தான் அப்துல் காதர் முத்து மொகமெட்டின் மகள் நசீமா (Minor) அவரின் நெருங்கிய நண்பர் (Next Friend) யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு, ராவ்ஸ்வீதி (Taff'sRoad) 73ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் மொகமெட் அப்துல்லா காதர் மொகதீன்.

வழக்காளிகள்

எதிராக

1. அக்பார்றசீன் (Minor) கல்லூரிவீதி (College Road) வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.
2. நயினா மொகமெட் அக்பார், கல்லூரிவீதி (College Road) வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

முதலாம் எதிரி மைனராயிருப்பதால் (Minor) இரண்டாம் எதிரி முதலாம் எதிரியின் பராமரிப்பாளர் (Guardian-ad-litem)

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் பாட்டிசன் வழக்கு இலக்கம் P/948-ல் எனக்குக்கிடைத்த கோட்டின் கட்டளைப்படி இதன்கீழ் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் ஆண்டு தை மாதம் (January 10-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிகளுள் நின்று, முந்த முந்த அக் காணியின் பங்காளருக்கிடையிலும், அப் பங்காளர் வாங்கத்தவறின் பின்னர் என்னால் பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும். ஆதனத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா 26802/-) ரூபா இருபத்தி ஆறுயிரத்திஎண்ணூற்றி இரண்டு.

ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார் பண்ணை தென்மேற்கிறை, 'பிச்சிக்குளம்கரை' உறுதிப்படி நிலப்பரப்பு ஒன்றும் குளி 14ம். ஆனால் மேலே குறிக்கப்பட்ட வழக்கு இல. P/948-ல் என்னால் அளக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டதும் 19-1-1966 எனத்தேதி இடப்பட்டதுமான 411-ம் இலக்கப் பிளானின்படி நிலப்பரப்பு ஒன்றும் குளி 11.39ம் கொண்டகாணியும் அதனுள்ளடங்கிய கல்வீடும், கிணறும், சாமான்கொட்டிலும், (Store), மல கூடமும் செய்பயிர்களும். இதற்கு எல்லை:- கிழக்கு:- மொகமெட்மொகிடீனின் ஆதனம். வடக்கு:- A. K. மொகமெட் சுல்தானின் ஆதனம். மேற்கு;- ஒழுங்கை. தெற்கு:- அப்துல்றகுமனின் மனைவி சுகுறுபிபியின் ஆதனம் இதடங்கலும்.

கே-கே. அம்புறேஸ,  
கொம்மிசனர் &நிலஅளவையாளர்.

16, மடம் வீதி,  
யாழ்ப்பாணம். 366

யாழ்ப்பாண

மாநகரசபை

## ஏல விற்பனை

பாசையூர்ச் சந்தை எல்லைக்குள் உள்ள இரண்டு கடை அறைகளுக்கான 1968-ம் ஆண்டுக் குத்தகை எதிர்வரும் 26-12-67-ம் திகதி காலை 10 மணிக்கு அவ்விடத்தில் ஏலவிற்பனை மூலம் விற்கப்படும்.

மேற்கொண்டு தகவல்களை அலுவலகநேரத்தில் மாநகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா  
மாநகரசபை  
ஆணையாளர்

மாநகரசபை அலுவலகம்  
யாழ்ப்பாணம்.  
10-11-67 370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொய்னு பூகம்பத்தில் மாண்டவர் தொகை

## 105 ஆக அதிகரிப்பு

## நகரம் ஒரே சேதக்காடு

பம்பாய், டிசெ. 12

**மகாராஷ்டிராவில் உள்ள கொய்னு நகரிலும், சுற்றுப்புறத்திலும் நேற்று ஏற்பட்ட பூகம்பத்தில் உயிரிழந்தோர் தொகை 105 ஆக உயர்ந்துள்ளது. இடிபாடுகளுக்கிடையில் மேலும் பல சடலங்கள் புதைந்து இருக்கலாமென நம்பப்படுகிறது. நகரைச் சுற்றிப் பத்து மைல் எல்லைக்குள், சடலங்களைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இப்பூகம்பத்தில் ஏற்பட்ட இடிபாடுகளினால் காயமுற்றோர் 13,000க்குமதிகமானோர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 300 பேர் கடுமையான காயமடைந்துள்ளனர்.

### நிவாரணம்

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருத்துவ நிவாரணமளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. கொய்னு நகரிலிருந்து குடிகள் அனைத்தும் வெளியேற்றப்படுகிறது.

கொய்னுவுக்குச் சென்று பூகம்பத்தின் விளைவுகளை நேரில் பார்த்த பத்திரிகையாளர் கோஷ்டியொன்று நகரம்முழுவதும்ஒரே சேதக்காடாகக்காட்சியளிப்பதாக வர்ணித்துள்ளது. அங்குள்ள மக்களின் முகங்களெல்லாம் பீதியில் தோய்ந்திருக்கண்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். நகரில் உள்ள சகல தந்தி, தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு, நகரம் இதரபகுதிகளிலிருந்துமுற்றுகப்பிரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### மின்சார விநியோகம் தடைப்பட்டது

கொய்னு மின்சக்தி நிலையத்துக்கு ஏற்பட்ட சேதத்தின் விளைவாக, பம்பாய், பூனுப்பகுதி முழுவதற்கும் மின்சாரவிநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. சகல கைத்தொழில், நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலையின்றி இருக்கின்றனர். ஆனாலும், மின்சக்தி நிலையம் இன்னும் இரண்டொரு தினங்களில் மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக நிலைய அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

### அனுதாபம்

பூகம்பத்தில் உயிரிழந்தவர்களுக்கும், காயப்பட்டவர், சேதமடைந்தோர்களுக்கும் மகாராஷ்டிர முதல் மந்திரி, கவர்னர், உள்துறை மந்திரிஆகியோர்அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இந்திய

# ஆட்சி மொழி திருத்த மசோதா

## பல நகர்களிலும் பலத்த ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, டிச. 12

**இந்திய ஆட்சி மொழிச் சட்ட திருத்த மசோதா பார்லிமெண்டில் விவாதிக்கப்படும் அதே நேரத்தில். இந்தியாவின் பல நகரங்களிலும் ஆங்கில நீடிப்பை எதிர்த்து பலாத்காரச் சம்பவங்களும், ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.**

உஜ்ஜையினில் நேற்று நடைபெற்ற வன்முறை ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து, அங்கு 18 மணிநேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தானில் பல இடங்களில், மாணவர்கள் ஆங்கில எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர்.

புதுடில்லியில், பார்லிமெண்ட் முன்னுல் ஆங்கில எதிர்ப்புக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்த 24 பேரைப் பொலிசார் கைது செய்தனர்.

லக்னோவில் வன்முறைக் கும்பலொன்று கல்வீச்சில் இறங்கியபோது, 15 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அலஹபாத்தில் 4000பேர் அடங்கிய மக்கள் கூட்டமொன்று, ரயில்வே ஸ்டேஷனை முற்றுகையிட்டனர். அவர்கள் பொலிசார் மீது கல் வீச்சிலும் இறங்கினர். பொலிசார் சிலரைக் கைது செய்தனர் கூட்டத்தினர். நகரில் உள்ள சில ஆங்கிலப் பெயர்ப்பலகைகளையும் தகர்த்தெறிந்தனர்.

### ஜப்பானில் இந்திய வர்த்தக மந்திரி


டோக்கியோ, டிச.12

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சார்பில், ஜப்பானுக்கு வந்துள்ள இந்திய வர்த்தகமந்திரிதிரு. தினேஷ் சிங், தமது விஜயம் திருப்தியளித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

மேம்பாடடைந்துள்ள நாடுகளுக்கும் மேம்பாடடைந்து வரும் நாடுகளுக்கு மிடையேயான வித்தியாசத்தை நீக்குவற்கான வழிவகைகளைத் திரு. தினேஷ்சிங்கின் தலைமையில் இங்குவந்துள்ள தூதுகோஷ்டி ஜப்பானிய தலைவர்களுடன் விவாதிக்கும்.

### செல்வ நாடுகள் உதவித்திட்டம்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குக்காப்புவரிச்சலுகைகள்அளிக்கும் திட்டமொன்றை 21செல்வ நாடுகள் தயாரித்துள்ளதாகவும், இத்திட்டம் அடுத்த பெப்ரவரியில் புதுடில்லியில் கூடும் ஐ.நா. வர்த்தகம், அபிவிருத்தி மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுமென்றும் ஜப்பானிய அதிகாரி ஒருவர் திரு. தினேஷ்சிங் இடம் தெரிவித்துள்ளார்.



### ரஷ்யாவில் காந்தி சிலை

மாஸ்கோ, டிச, 12

மகாத்மா காந்தியின் நூறுவது பிறந்ததின விழாவை, 1969-ம் ஆண்டில் ரஷ்யாவில் பெருமளவில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகவலை சோவியத் ஆசிய மக்கள் நிலையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழாராய்ச்சி

### மாநாட்டில் மேலும் இரு சிலைகள்

சென்னை, டிச. 12

தமிழ் நாட்டில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மேலும் இரண்டு அறிஞர்களின் சிலைகள் நிறுவப்படவிருக்கின்றன.

திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த போப்பையர், திராவிட மொழிகள் பற்றி ஆராய்ச்சி நூல் எழுதிய வண. கால்டுவெல் ஆகிய இரு அறிஞர்களின் சிலைகளே அவை.

இவ்விரு சிலைகளுடன், தமிழாராய்ச்சி மாநாட்டில் நிறுவப்படும் அறிஞர் சிலைகள் மொத்தம் 11 ஆகும்.

### திருவெம்பாவை

கோப்பாய், செவ்.

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் திருவெம்பாவை உற்சவம் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 18-ம் திகதி அன்று அதிகாலை நடராஜப் பெருமானுக்கு ஆருத்ராதரிசன அபிஷேகமும் உற்சவமும், வீரபத்திர சுவாமிக்கு திருவூஞ்சல் உற்சவமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழகத்தில் லாவோஸ்மன்னர்

கோயம்புத்தூர், டிச. 12

இந்தியாவில் தற்போது விஜயம் செய்யும் லாவோஸ் மன்னரும், அவரது கோஷ்டியும் தமிழகத்துக்கு விஜயம் செய்யுமுகமாக கோயம்புத்தூர் வந்து சேர்ந்துள்ளனர்.

### பிரிட்டன் ஐ.அ.கு. உறவுகள்

லண்டன், டிச. 12

பிரிட்டனும் ஐக்கிய அரபுக் குடியரசும் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

# சைப்பிரஸ் பிரச்னையில் உடனடி நடவடிக்கை

## பந்தோபஸ்து சபையிடம் யூ தாண்ட் வலியுறுத்தல்

நியூயோர்க், டிசெ 11



சைப்பிரஸ் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஐ.நா.பந்தோபஸ்து சபை அவசரமான நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை ஐ நா. பொதுக் காரியதரிசி யூதாண்ட் வலியுறுத்தியுள்ளார்.

சைப்பிரஸில் நெருக்கடி நிரந்தரமாகத் தீர்க்கப்படவில்லையெனவும், அப்பிரச்னையை நேரத்துக்கு நேரம் நெருக்கடி நிலைமையை அப்பகுதியில் ஏற்படுத்தாத முறையில் தீர்த்து வைக்க வேண்டியது அவசியமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சமாதானப்படை

சைப்பிரஸில் நிறுத்தப்பட்டுள்ள ஐ. நா. சமாதானப்படையின்காலஎல்லையை நீடிக்கவும், அதற்கு அதிக அளவில் அதிகாரங்கள்வழங்கவும் ஐ. நா. பந்தோபஸ்து சபை உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யூதாண்ட் கேட்டுக்கொண்டுள்ளார்.

சைப்பிரஸில் உள்ள ஐ.நா சமாதானப்படையின் தற்போதைய கால எல்லை இம்மாதம் 26-ம் திகதியுடன் முடிவடைகிறது. அதற்கிடையில் சைப்பிரஸ் பிரச்னையை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்து சபை கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# திரு. மகாஜன் காலமானர்

## முன்னுள் இந்திய பிரதம நீதிபதி

சண்டிகார், டிச. 12

இந்தியாவின் முன்னுள் பிரதம நீதிபதி ஒருவரான திரு. மெஹர்சாண்ட் மகாஜன் நேற்று நள்ளிரவு சண்டிகாரில் காலமானர். அவருக்கு வயது 78.

திரு. மகாஜன். பிரதம நீதிபதிப் பதவி தவிர, வேறும் பல உயர்பதவிகளை வகித்துள்ளார். ஜம்மு—காஷ்மீரில் கவர்னராகவும் கடமையாற்றிய அவர், பல கமிஷன்களுக்குத் தலைமை வகித்துள்ளார்.

அண்மையில் மகாராஷ்டிரா—மைசூர் எல்லைத் தகராறு சம்பந்தமாக நிறுவப்பட்ட தனிநபர் கமிஷனைத் திரு. மகாஜன் கடமையாற்றினர்.

# கம்யூனிஸ்டுகளை தடைசெய்யும் அமெரிக்க அரசாங்க உத்தரவு

## சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது

வாஷிங்டன், டிச. 12

கம்யூனிஸ்டுகளை, பாதுகாப்புத் தொழிற்சாலைகளில் கடமையாற்றுவதிலிருந்து தடைசெய்யும் அமெரிக்க அரசாங்கஉத்தரவொன்றை அரசியற் சாஸனத்துக்கு முரணனதென அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நிராகரித்துள்ளது.

பாதுகாப்பு இரகசியங்கள் கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைக்காமல் தடைசெய்வதற்கான அரசாங்க உரிமையை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், தனி மனிதர் உரிமைகளில் அரசாங்கம் தலையிடுவதை அனுமதிக்க முடியாதென சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மே. வங்காள

### கவர்னர் நடவடிக்கை ஆட்சேப மனு

கல்கத்தா, டிச. 12

மேற்கு வங்காளத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கியமுன்னணி அரசாங்கத்தைப் பதவியிலிருந்து நீக்கி, அதற்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சிறு சிறு தொந்தரவுகள் ஏற்படினும் சிலர் அமைதிகுலைந்து ஆத்திரப்படுகிருர்கள். ஆனல் மனம் பரிசுத்தமடைந்து கட்டுப்படுத்தப்படின் எந்த நிலைமையையும் எதிர் நின்று அமைதியாக இருக்கலாம். மனதை சுத்தப்படுத்தி கட்டுப்படுத்த சுலபமான வழி இறைவன் பெயரைசதா உச்சரிப்பதுதான்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஹு கார்த்திகைமீ 27உ (13-12-67


## ராஜாஜியின் யோசனை

வடஇந்தியாவிலேஇப்பொழுது நடக்கும் மொழிக் கிளர்ச்சிகளும் பலாத்காரசம்பவங்களும் கவலையளிக்கக் கூடியதாகவுள்ளன. ஆசார்யவினேபாபாவே, ஸ்ரீஜெயப்பிரகாஷ்நாராயண் போன்ற தலைவர்கள் இதுகுறித்து மிக வருந்தி, கிளர்ச்சிகளை நிறுத்த வேண்டுமென்று கேட்டுள்ளனர். ஆனல் மொழிவெறியைக் கிளப்பி, அரசியல் ஆதிக்கம் பெற இங்கு இலங்கையில் முயற்சிகள் நடந்தது போல், இந்தியாவிலும் நடப்பதால், அவர்கள் செவியில் இந்த நல்லுபதேசம் ஏறுமா என்பது சந்தேகமே.

இந்தியுடன் ஆங்கிலமும் ஓர் அரசாங்க மொழியாக, இந்தி பேசாத மக்கள்விரும்பும்வரைஇருக்க வேண்டுமென்ற ஒரு சமரசக் கொள்கையைஅடிப்படையாகக்கொண்டு பிரதமர் இந்திராகாந்தியின் அரசாங்கம் கொண்டுவந்துள்ள மொழி மசோதாவை எதிர்த்தே இக்கிளர்ச்சிகள். நேருஜி அளித்த வாக்குறுதியை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடனேயே இம் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தி தீவிரவாதிகள்கேட்டபல திருத்தங்களையும் பிரதமர் இந்திரா ஒப்புக்கொண்டும், எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அடங்கவில்லை. இதில் மாணவர்களை ஈடுபடுத்தி, பலாத்காரச்செயல்களைத் தூண்டிவிடுபவர்கள் யாராயினும் அவர்கள் நாட்டுக்கு நன்மை செய்தவர்களாகார்.

இதைப்பற்றி ராஜாஜியைக் கேட்டதற்கு, அவர் 'பலாத்காரங்களைக் கேட்டு மிகத்துக்கப்படுகிறேன். இவ்வித சூழ்நிலையில் இம் மசோதாவை பார்லிமெண்ட் சபையில் நிறைவேற்றுவதால் லாபமெதுவுமேற்படப் போவதில்லை' என்று கூறி, மக்களின் 'இப்போதைய ஆத்திரம்' அடங்கும்வரை இந்திய அரசாங்கம் மொழிப் பிரச்னைக்கு 'ஒருவிடுமுறை அளித்துவிடவேண்டும்' என்று வற்புறுத்தியுள்ளார்.

நாடு விடுதலையடைந்ததும் மொழி உள்ளிட்டு கருத்து வேற்றுமையுள்ள பல பிரச்னைகளையும் ஒத்திவைத்துவிட்டு, பலரும் பொதுவாக ஒப்புக்கொள்ளக் கூடிய தேசிய முன்னேற்றத்துக்கான திட்டங்களை நடத்தி வைப்பதென்று இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் தேசாபிமானத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் தீர்மானித்திருப்பின், எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டு மக்களின் பிரச்னைகள் பலவும் தீர்ந்திருக்கும். ராஜாஜி கூறியுள்ள இந்த மேலான யோசனை இலங்கைக்கும் பயன்படுவதாகும். குறுகிய கட்சி நன்மையைவிட தேச நன்மையைப் பெரிதாகவும் முக்கியமாகவும் கருதக்கூடிய தேசாபிமானமே இதற்கு அதிகம் தேவை.

## கருணையற்ற உத்தரவு

என்றுமில்லாதபடி ஏற்பட்ட வெள்ளத்திலே அவதியுற்றவர்களுக்கு உடனடியாகஅரிசி, மாவு, சீனி முதலியவற்றை இலவசமாக விநியோகிக்க அரசாங்கம் முன்வந்தது வரவேற்கத்தக்கது. ஆனல் அப்படிச் சென்ற வாரம் அரிசிபெற்றவர்கள், இவ்வாரத்து கூப்பனை கொடுத்துவிட வேண்டுமென்றும் இவ்வாரம் அவர்களுக்கு அரிசி கிடைக்காதென்றும் போட்டுள்ள உத்தரவு ஏமாற்றமளிப்பதுடன் கருணையற்றதுமாகும்.

இவ்வித ஆபத்தான காலத்தில் அரசாங்கம் விசேஷ உதவிகளை அளிக்கவேண்டியிருக்க இவ்வாரத்திலே அவர்களுக்கு அரிசி கிடைக்காதென்றும் ஆனல் கூப்பன்களை கொடுத்துவிடவேண்டுமென்றும் கேட்பது ஒரு நாகரீக அரசாங்கத்துக்குஅழகாகாது. ஏதோ மிகக் குறுகிய மனப்பான்மையுள்ள அதிகாரிதான் இவ்வித உத்தரவுக்குக் காரணமாக இருக்கவேண்டும். யார் காரணமாயினும் சரி, மக்களின் பிரதிநிதிகள் பிரதமரிடம் இது பற்றி தக்கபடி எடுத்துக்கூறி இந்தக் கருணையற்ற உத்தரவை உடன் மாற்றி இவ்வார கூப்பன் அரிசி, அந்த எளிய துரதிர்ஷ்டமக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

யாழ்.ரயில்நிலையத்துக்கு

## டிக்கட் மெஷின் வரும்

யாழ்ப்பாணம், புதன்

'யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலிருந்து முன்னரிலும் பார்க்க இப்பொழுது அதிகமானபிரயாணிகள் பிரயாணம் செய்கிருர்கள். அதற்கேற்ப இங்கு புகையிரதங்களும் அதிக அளவில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனல் டிக்கட் எடுப்பதற்கு நீண்ட கியூ தினமும் ஏற்படுகிறது. பிரயாணத்துக்குரிய டிக்கட் கொடுப்பவரே இங்கு பிளாட் பார டிக்கட்டையும் வழங்குவதால் சிலசமயங்களில் பிரயாணிகள் தாமதத்துக்குள்ளாகிபுகைவண்டிகளை தவறவிடவேண்டிய நிலைஏற்பட்டுள்ளது. எனவே ஒரு பிளாட்பார டிக்கட் மெஷினை யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்குத் தந்துதவுக.'

வட இலங்கைப் பெதுப் போக்கு வரத்து பிரயாணிகள் சம்மேளனக் காரியதரிசி திரு. ரி. வேலுப்பிள்ளை புகையிரத இலாகா அதிபருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் மேற்கண்டவாறு கோரியதற்கிணங்க உடனடியாக ஒரு பிளாட்பார டிக்கட் மெஷினை யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புகையிரத இலாகா அதிபர் அறிவித்துள்ளார்.

ஆசிரியருக்கு கடிதங்கள்

## செய்த தவறை திருத்துவோம்

வைகை நதி பெருக்கெடுத்தபொழுது பாண்டியன் எவற்றைச் சிந்தித்தான் என்பதைச் சைவர் யாவரும் நன்கறிவர். விரிக்க வேண்டா.

விநாயகர் ஆலயங்கள் மலிந்த யாழ்ப்பாணத்திலும் கீழ்மாகாணத்திலும் வடிவழகி கோவில் கொண்டிருக்கும் சிலாபப் பகுதியிலும் விநாயகர் ஷஷ்டி, சக்தி பூஜை என்பன எவ்வளவு சிறப்பாக ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படுபவை. இவ்வாண்டு விக்கினங்களை ஆக்குபவரும் அவற்றை நீக்குபவரும் ஆகிய அப்பரமேசுவரனுடைய நோன்பு விரதம் அனுட்டித்த ஆலயங்களுக்கே பக்தர்கள் செல்ல முடியாமல் புரோகிதர்களிருக்குமிடம் சென்று "இழையை ஒப்படைக்க வேண்டிய கதி ஏன் ஏற்பட வேண்டும்?" ஆதலின் 'விக்கினந் தீர்க்கும் விநாயக... அச்சறுத்தருளும் அரசே போற்றி' என்றவாறுவிநாயகப் பெருமான் தம் விரத பூர்த்தியிலன்று ஆற்றியதிருவிளையாடலை உய்த்து உணர்ந்து மனிதர்தம் சிறுமையையும் பரமகருணாநிதியின் பெருமையையும வாழ்த்துவார்களாக. முன் செய்த தவறைத் திருத்தி வரும் கார்த்திகை 28 வியாழக்கிழமை திருக்கார்த்திகையில் முருகனலயங்களில் விளக்கேற்றுவோம். மார்கழி முதலாந் திகதி சனிக்கிழமை விநாயக விரதம ஆரம்பிப்போம். இன்று எம் மூன்று பிரதேசங்களுமுள்ள பொருளாதார நிலையில் பக்தி நோன்பாக விரதத்தை அனுட்டிப்போமாக. மார்கழி 21-ந் திகதி வெள்ளிக்கிழமை நோன்பைப் பூர்த்தி செய்வோம், மார்கழி 20-ம் திகதி வியாழன் பின்னிரவு 3 மணியிலிருந்து 5 மணிவரை சக்தி பூஜையைச் செய்வோமாக. 29-ம் திகதி சனிக்கிழமை இரவு 2 மணிக்கு நடேசர் அபிஷேகம் செய்வோம். 4 மணிக்குத் திருவாதிரைக் களியை நிவேதிப்போம். 5 மணிக்கு ஆர்த்திரா தரிசனக் காட்சியைக் கண்டு களிப்போம். 30-ம் திகதி முற்பகல் விரதத்தையும் தீர்த்தத்தையும் பூர்த்தி செய்வோம். சகல மங்கல முமுண்டாகட்டும். சுபம்.

கு. பாலசுந்தரக் குருக்கள்
மாவை,
தெல்லிப்பளை.

ஃ ஃ ஃ

### பேரவை தீர்மானம்

திருகோணமலைப் பேரவையின் திருவெம்பாவை ஆலோசனைக் கூட்டத்தில் யானும் கலந்து கொண்டமையினலும், அப்பேரவையில் சுமுகமான முடிவு எடுக்கப்பட்டமையினலும் அதற்கிணங்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் மார்கழித் திருவெம்பாவை விழா மார்கழி மாதம் 21ம் திகதி (5-1-68) தொடங்குமென்பதை மனமகிழ்ச்சியுடன் சைவப் பெருமக்களுக்கு அறியத் தருகின்றேன்.

க. சு. சித்திரவேல்,
தலைவர்,
திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபை
திருக்கோணமலை.

ஃ ஃ ஃ

### பெருமை தருவது

ஈழத்திலும் இங்கு திருக்கோணமலையிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கோயில்களைத் தவிர மற்றும் ஆலயங்கள் அனைத்திலும் மார்கழி மாதம் 3-ம் திகதியே ஆருத்திரா தரிசனம் மேற்கொள்ளப்படுவது ஈழம்வாழ் சைவமெய்யன்பர்களாகிய எமக்கெல்லாம் பெருமையைத் தேடித் தருவதாகும். ஆகமவிதிகளைக் காத்து, அதன் வழிநின்று ஆருத்திரா தரிசனத்தை மேற்கொள்ளும் ஆலய அட்சகர்களுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், சைவமெய்யன்பர்களுக்கும். சரியான பாதையைக் கணித்துக்காட்டக்கூடிய ஈழத்துப் பஞ்சாங்கங்கள் அனைத்துக்கும்எனது வாழ்த்தும்--வணக்கமும் உரித்தாகுக!

க. வேலுப்பிள்ளை
(சோதிடக்கலாநிதி)
திருக்கோணமலை.

## இன்றைய பலன்

13-12-67 புதன்கிழமை கார்த்திகை மீ 27 உ
நட்சத்திரம்- அச்சுவினி பகல் 7-12 மேல் பரணி.
திதி- துவாதசி, இரவு 11-36 வரை மேல் திரயோதசி.
சுபநேரம்- 4-50—6-20
ராகுகாலம்- 12-20—1-50.

மேஷம்- விரக்திமனப்பான்மை, தனிமையில் நாட்டம்.
ரிஷபம்- தலைமைப்பேறு தரமான வாழ்வு.
மிதுனம்- கவலையின் ரேகை காரியத்தடை.
கடகம்- புதுவாழ்வு அமைதியுமுண்டு.
சிம்மம்- சிறந்தநோக்கு சீரான நிலை.
கன்னி- எண்ணப்படுதாவில் ஏக்கத்தின் சாயல்.
துலாம்- உவகைக்கூத்து உறவு பலப்படும்.
விருச்சிகம்- தடை பல தாக்கும், தனச்சேதம்.
தனுசு- பேரும் புகழும் பெருமையும் சேரும்.
மகரம்- தன்னம்பிக்கை தலைமை இடம்.
கும்பம்- உறவாடுநன்று உரிமையும் கிடைக்கும்.
மீனம்- நம்பிக்கை நலியும், சோகபிம்பம்.

சோதிடக் கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## எண் சோதிடத்தில் ஓர் ஐயம்

ஈழநாடு-6-12-67 இதழில் [எண்] சோதிடர் பார்வையில் நவீன சந்தையும் பிரதமர் விஜயமும் என்ற கட்டுரை வாசிப்பதற்கு சுவாராஷ்யமாகவிருந்தது. ஆனல் எண் சோதிட மாணவர்களாகிய என்போன்றவர்களுக்கு சில ஐயப்பாடுகள் தோன்றக்கூடியதாக அக்கட்டுரை அமைந்துள்ளது.

எந்த ஒரு சம்பவத்தையும் அல்லது காரியத்தையும் ஒருவர் செய்யும் போது அக்காரியத்தை செய்யும் திகதியின் கூட்டு எண் [அதாவது திகதி மாதம் வருடம் மூன்றையும் கூட்டினல் வருவது] தமக்கு சாதகமான நாட்களிலேயே செய்ய வேண்டும். அப்படி செய்தால் தான் அதனல்நன்மையுண்டு என்பதும், செய்யும் திகதி மட்டும் நல்லதாய் இருந்து கூட்டுஎண்சரியில்லையென்றல் முதலில் நன்மையாக ஆரம்பமாகி துரதிருஷ்டத்தில் முடியும் என்பதும் எண்கலையில் நம்பிக்கையுள்ளவர்களின் முடிவு. ஆனல் கட்டுரையாளர்பெயர் எண்களின் கூட்டு எண்ணை கவனித்த அளவுக்கு பிரதமர் அவர்களின் பிறந்த திகதியின் கூட்டு எண்ணையோ அல்லதுஅடிக்கல் நாட்டப்படும் திகதியின் கூட்டுஎண்ணையோ கவனித்து அதன்பலன்களை அறிந்தாரா என்பது கட்டுரையில் புலனுகவில்லை.

சமயாசாரப்படி அத்திபாரமிடப்பட்ட திகதி 24-11-1967. இது மிகவும் விசேஷமானதாகும் என்று கட்டுரையாளர் குறிக்கிவுர். ஆனல் அத்திகதியின் கூட்டு எண் 4, இந்த எண்கடும் எதிர்புக்களையும் போட்டிப் பொருமைகளையும்ஏற்படுத்தவல்லது. ஒரு எண்காரர்களுக்குஇந்த எண்ணின் தன்மைகள் வெகுவாகப் பலிதமாகும். பிரதமர் 19-ம் திகதி பிறந்தஒருஎண்காரர் அடிக்கல்லை பிரதமர் 5-12-1967ல் நாட்டினர். இந்தத் திகதியின் கூட்டு எண்ணும் 4தான். இத்திகதியில் செய்யப்படும் காரியங்கள் முதலில் வெற்றியாகத் தோன்றிஇடையில் பெரும் எதிர்ப்புக்களுக்கும் சங்கடங்களுக்கும்இடம் தரும் என்பதே எண்களைமட்டும்கருத்தில் கொள்ளும் என்போன்றவர்களின் அபிப்பிராயம். ஆனல் சோதிடக்கணிப்பின்படி இத்திகதி ஒருவேளை விசேஷமானதாகவிருக்கலாம் கட்டுரையாளர் சோதிடத்தைத் தமது கணிப்புக்கு பயன்படுத்தினர் என்பது தெரியவில்லை. எண்களை மட்டும் கொண்டு சம்பந்தப்பட்ட திகதிகளைக் கவனிக்கையில் சிலாக்கிய மானவையாவாய் தெரியவில்லை. கொழும்பு யாழ்ப்பாணய் ஆகியநகரங்களின்ஆங்கிலப் பெயர் எண்களின் கூட்டு எண்கள்பொருத்தமாகவிருக்கலாம் ஆனல் அங்கே செய்யப்படும் காரியங்களும் பொருத்தமான கூட்டெண்வரும் திகதிகளில் செய்யப்பட வேண்டுமென்பது எமது கருத்து.

[எண்சோதிட மாணவன்]

—

### விவசாயிகளிடம்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடனையும் விவசாயிகளிடமிருந்து திருப்பி பெறவேண்டாமென்றும் வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும், உப- உணவுபயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் கடன்களை திருப்பிப்பெறு விட்டால் விவசாயிகள் கஷ்டம் குறையுமென்றும் யாழ்ப்பாண எம்.பி. மந்திரியிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாண எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சமுக சேவைப்பகுதி உப அதிபர் திரு.என். சிவசிதம்பரத்தை சந்தித்து யாழ்ப்பாணபகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் நிவாரணம்வழங்க ஒழுங்குகள்செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அரசாங்க அதிபர், சமுக சேவை உப அதிபர் காரியாதிகாரி ஆகியோர்களையும், உடனடியாக வெள்ளநிவாரணவேலைகளை கவனித்ததற்காக யாழ்ப்பாண எம். பி. பாரட்டுத் தெரிவித்தார்.

சமுகசேவை பகுதியினர் மிகவும் சுறுசுறுப்பாகவேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்

## "கொள்...
## தெரிவி...
### பொதும...
### பொலிஸ் அ...

யாழ்ப்பாணம், புத...
'யாழ்ப்பாணத்தில்சமீப...
தில் ஏற்பட்ட வெள்ள...
பாதிப்பைத் தொடர்ந்...
உணவுப் பொருட்களி...
கொள்ளை இலாபம் அடி...
துக்கொண்டிருக்கும் த...
யார்வர்த்தகஸ்தாபனங்க...
மீதும், பகிரங்கமாக தற்ச...
யம் உணவுக் கட்டுப்பாட்...
விலையை மீற் விற்பனை ந...
த்திக்கொண்டிருக்கும் கை...
க்காரர் மீதும் பொலிசா...
எந்த நேரத்திலும் திடீ...
சோதனை நடத்தவிருக்கிறு...
கள். எனவே வர்த்தகர்க...
தமக்கும் பொதுமக்களு...
கும் கஷ்டத்தை ஏற்படு...
திக்கொள்ளாமல் நியா...
விலைக்கு உணவுப் பொரு...
களை விற்க முன்வரவே...
டும்' என யாழ். மாவட்...
பொலிஸ் அதிபர் திரு. ஆ...
சுந்தரலிங்கம் நேற்று நம...
நிருபரிடம் கூறினர். அ...
மேலும் குறிப்பிட்டதாவ...
வெள்ளத்தினல் ...கடுமை...
யாகப் பாதிக்கப்பட்டு தம...
வீடுகளையும் உடைமைக...
யும் இழந்துபொது நிலைய...
ளில தஞ்சம் புகுந்துள்...
ஏழைமக்களிடம் வர்த்த...
கள் கொள்ளைலாபமடிப்ப...
மகா பாவமான செய...
ஈவிரக்கமின்றி அதிக வி...
குப் பொருட்களை விற்கு...
வியாபாரிகளுக்கு பொலி...
ரும் ஈவிரக்கம் காட்டமா...
டார்கள். உணவுக் கட்டு...
பாட்டை மீறும் வர்த்த...
களைப்பற்றி உடனடியாக...
தகவல் தெரிவிக்கும்ப...
பொலிசார் பொதுமக்களை...
கோருகின்றனர். நிருபிக்...
கூடியமுறையில் பொலிச...
வலையில் சிக்கும் வியாபா...

வெள்ளத்தால் ...

## ஆபத்...
## தடுக்...

திருநெல்வேலி பிரதே...
பொறுப்பதிகாரி...
திரு. எஸ். வி...
பாதிக்கப்பட்ட ப...
அனுஷ்டிக்கவே...
யோசனைகளைத்...

தொடர்ந்து பெய்த பெ...
மழையால் மக்கள் வ...
வாசல்களை இழந்தது மட்...
மல்ல; பல கஷ்டங்களைய...
அனுபவித்துவருகின்றன...
வெள்ளம் வடிந்துகொண்...
ருக்கிறது. மழை ஓய்ந்...
விட்டது. ஆயினும் வெ...
ளத்தால் பாதிக்கப்பட்...
மக்களை விழுங்குவதற்...
அபாயம் மிகுந்த நோய்க...
எதிர்பார்த்துக்கொ...
டிருக்கின்றன. இந்த நோ...
கள்பற்றியும் இவற்றை...
தடுப்பதுபற்றியும் சிலயோ...
னைகள் இங்கே தரப்படுகி...
றன.

1. நெருப்புக் காய்ச்சல்...
2. வயிற்றோட்டம்,
3. வயிற்றுளைவு.
4. இருமல் தடிமல்.

### இவற்றைத் தடைசெய்யும் முறைகள

1. குடிக்க நீரெடுக்கு...
கிணறுகளுக்கு 1000 ...
னுக்கு ஒரு அவுன்ஸ் எ...
விகிதத்தில் குளோரின் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..கள்ளலாப வர்த்தகர் பற்றி ..றிவியுங்கள்"

## ..ாதுமக்களுக்கு ..ஸ் அதிபர் அறிவிப்பு

..ணம், புதன்
..த்திலிசமீபத்
.. வெள்ளப்
.. தொடர்ந்து
..ருட்களில்
..பம் அடிக்
..க்கும் தனி
..தாபனங்கள்
..மாக தற்சம
..ட்டுப்பாட்டு
..ிற்பனை நட
..ருக்கும் கடை
.. பொலிசார்
..லும் திடீர்
..தவிருக்கிறார்
..வர்த்தகர்கள்
..ாதுமக்களுக்
..த ஏற்படுத்
..ல் நியாய
..ுப் பொருட்
..ன்வரவேண்
... மாவட்ட
..ர் திரு. ஆர்.
..நேற்று நமது
..ினார். அவர்
..ிட்டதாவது:
..ால் கடுமை
..ப்பட்டு தமது
..உடைமைகளை
..ாது நிலையங்க
.. புகுந்துள்ள
..ம் வர்த்தகர்
..லாபமடிப்பது
.. செயல்.
.. அதிக விலைக்
..களை விற்கும்
..க்கு பொலிசா
.. காட்டமாட்
..ணவுக் கட்டுப்
..ும் வர்த்தகர்
..உடனடியாகத்
..தரிவிக்கும்படி
..பாதுமக்களைக்
..ர். நிரூபிக்கக்
..ல் பொலிசார்
..ம் வியாபாரிக
ளுக்கு குறைந்தது 6 மாதக் கடும் சிறைத்தண்டனையாவது வழங்க பொலிசார் முயற்சிப்பர். (வி. நி.)

---

## தொழிலாளர் வாழ்வு

நாவலப்பிட்டி, செவ்.

"தொழிலாளர்களை வாழவைக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே இந்நாட்டின் பொருளாதார நெருக்கடியை நீக்கிக்கொள்ள முடியும். மிக மோசமான நிலையில் வாழ்ந்துவரும் எமது நிலையை இந்நாட்டு அரசாங்கமும் தோட்டச் சொந்தக்காரர்களும் மனிதாபிமானமுறையில் அணுகி தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான அளவு சம்பள உயர்வு தரவேண்டும்'' என்று பசுமலை சின்னத்தோட்டத்தில் நடைபெற்ற தோட்டத் தேர்தல் கூட்டத்தில் உரைநிகழ்த்திய இலங்கை தொழிலாளர்கழகத்தின் இணைப்புப் பொருளாளர் திரு. எல்லாளன் மேற்கண்டவாறு கூறினர்.

வாலிபமுன்னணித் தலைவர் திரு. நீலமேகம் உரை வழங்கினர்.

---

## ஆலமரம் சாய்ந்தது

காரை நகர், செவ்வாய்

இடைவிடாது பெய்த பெருமழையுடன்காற்று வீசியதால் காரைநகர்சின்ன ஆலடிச்சந்தியிலுள்ள ஆலமரம் வேருடன் சாய்ந்துள்ளது.

# நிவாரணஉதவியில் பாகுபாடு கிடையாது

யாழ்ப்பாணம், புதன்

வெள்ளஅகதிகள் எல்லோருக்கும் அரசாங்கம் நியாயமான முறையில், நிவாரணம் வழங்க முயற்சிஎடுத்து வருகிறது.

பாகுபாடின்றி நிவாரண உதவி வழங்கப்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் ஒற்றுமையாகப் பணியாற்றி வருகின்றனர்.

தவறுதலாக எப்பகுதியிலாவது, வெள்ள அகதிகள், நிவாரணம் பெறமுடியாது போய்விட்டால், அரசாங்க அதிபருக்கு உடனடியாக அறிவித்து, தங்கள் கஷ்டத்தைப் போக்க முயற்சிஎடுக்கலாமென்று அரசாங்க செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கிராமசேவகர்கள் ஒவ்வொருஅகதிகளின் விபரங்களையும் மிகவும் கவனமாகபரிசீலனை செய்து வருகின்றனர். வெள்ள அகதிகள் உடனடியாக கிராமசேவகர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். தங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை அவருக்கு அறிவிக்கவேண்டும்.

## 'இந்தியாவின் ஒரே மொழியாக இந்தியை ஒருபோதும் ஏற்கோம்'

### லோக சபையில் அன்பழகன்

புதுடில்லி, டிச. 12

ஆட்சி மொழிச்சட்டத் திருத்த மசோதாவுக்குக் கொண்டுவரப்படும்உத்தேச திருத்தங்கள். இந்தி பேசாத மக்களுக்குத் திருப்தியளிக்காதென்று தி. மு. க. அங்கத்தவர் திரு. அன்பழகன் நேற்று லோக சபையில் கூறினர்.

'இந்தியை நாட்டின் ஒரே மொழியாக நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்' என்று மேலும் கூறிய அவர் ஆங்கிலத்தைத் தாம் கற்பது, அதன் மீதுள்ள மோகத்தினாலன்று என்றும், அவசியத்தினாலேயே என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் சகல மொழிகளுக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதே தமது கட்சியின் கொள்கை என்றார் அவர். இந்தி மொழி விஷயத்தில், நாட்டின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு, இந்தி பேசும் மக்கள் பொறுமை காட்ட வேண்டுமென்றும் திரு. அன்பழகன்கேட்டுக்கொண்டார்

## வெளிநாட்டு செய்தித்திரட்டு

### சூப்பர்ஸோனிக் விமானம்

பாரிஸ், டிசெ 12

பிரிட்டனும் பிரான்சும் இணைந்து தயாரித்துள்ள முதலாவது சூப்பர்ஸோனிக் விமானம், டூலோஸ் என்னுமிடத்திலிருந்து பறக்க விடப்பட்டது. இவ்விமானத்துக்கு, இரு நாடுகளினதும் பரஸ்பர ஒப்புதலின்படி, 'கொன்கோடே' என்ற பெயர் சூட்டப்பட்டது.

1970-ம் ஆண்டுக்கிடையில். இவ்விமானம் லண்டனிலிருந்து நியூயோர்க்குக்கு 3 மணி நேரத்தில் பறந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

### எழுத்தாளர் ஆட்சேபம்

மாஸ்கோ, டிசெ. 12

கடந்த 9 மாதங்களாகத் தடைக்காவலில் வைக்கப்பட்டுள்ள 4 இளம் ரஷ்ய எழுத்தாளர்களை விடுவிக்குமாறு 100 ரஷ்ய உழுத்தாகள் அரசாங்கத்திடம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ரஷ்ய எதிர்ப்புப் பிரசாரம் செய்ததும், இரகசிய சஞ்சிகை ஒன்று நடத்தியதுமே இந்த 4 இளம் எழுத்தாளர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளாகும்.

ஃ ஃ ஃ

### நீக்ரோதலைவரின் பாஸ்போர்ட் கைப்பற்றப் பட்டது

வாஷிங்டன், டிசெ. 12

கியூபா, வட வியட்னும் மற்றும் சில ஆபிரிக்க நாடுகளுக்கும் விஜயம் செய்து விட்டு அமெரிக்கா திரும்பியுள்ள அமெரிக்க நீக்ரோத் தலைவரான திரு. கார் மைக்கேயின் பாஸ்போர்ட் அரசாங்கத்தினுல் கைப்பற்றப் பட்டது.

கியூபா, வட வியட்னும் சீனு போன்ற சில குறிப்பிட்ட நாடுகளுக்கு அமெரிக்கப் பிரஜைகள் விஜயம் செய்வதைத் தடைசெய்யும் சட்டமொன்று அமெரிக்க சட்டசபையில் விரைவில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

# அங்கப் பரிவர்த்தனை

இந்த ஆபிரஹாம்கோவூர் என்பவர் இருக்கிருரே! ஆசாமி ரொம்ப பொல்லாத மனிதர்! அவருக்கு பெல்லி, சூன்யம்' செய்வினை, மாந்திரீகம், மாயம், ஆன்மா, ஆவியுலகம், மறுபிறப்பு இவை ஒன்றிலும் நம்பிக்கை கிடையாது? எல்லாம் 'வெள்புலுடா' என்று ஒரேயடியாக ஒதுக்கி தள்ளிவிடுவார். அவரை ஒரு தீவிர பகுத்தறிவாளர் என்று கூறலாம்.

மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்று சிலரால் கருதப்பட்ட சம்பவங்களை, அதாவது பேய் பிசாசுகளின் கோளாறு என்று நினைப்பவற்றை, கோவூர் தாமே நேரில் சென்று ஆராய்ந்து அவையெல்லாம் சுத்தப்பொய் என்பதை நிரூபித்துமிருக்கிருர். ஆகையினுல் அவர் தெரிவிக்கும் கருத்துகளை முழுக்கமுழுக்க நிராகரிக்கவும் முடியாது.

ஐம்புலன்களுக்கு எட்டாதவை எனத் தோற்றும் சில சம்பவங்களை தம்முடன் நேரில் கதைத்து நிரூபிக்குமாறு அவர் சிலருக்கு பகிரங்கமாக சவாலும் விடுத்திருக்கிருர். ஆனுல் ஒருவரும் அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளவில்லை!

சில நாட்களுக்கு முன்பு தென்னுபிரிக்காவில் நடந்த ஓர் அதிசயத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா?

கார் விபத்தில் இறந்த ஓர் இளம் பெண்ணின் இரத்தாசயத்தை [அது முற்ருக செத்துப்போகு முன்பு] பிடுங்கி எடுத்து இரத்தாசயக் கோளாறு இருந்த ஓர் 56 வயது மனிதருக்கு பொருத்தி வைத்தியசமித்திரத்திலேயே ஒரு புதுமையைச் செய்திருக்கிருர்கள் சத்திர சிகிச்சை நிபுணர்கள்.

அப்பெண்ணின் பெயர் தர்வால். கிழவரின் பெயர் லூயி வஸ்கன்ஸ்கி. இப்பொழுது தர்வாலின் இரத்தாசயம் லூயியின் மார்பகத்துக்குள்ளிருந்து துடிக்கிறது.

இந்த இரத்தாசயப் பரிவர்த்தனை நடந்து இன்றைக்கு நாட்கள் பத்து கழிந்தும் லூயி பூரண ஆரோக்கியத்துடன் முட்டையும் பாலும் சாப்பிட்டு வருகிருர். தர்வால் இறந்துவிட்டபோதிலும் அவருடைய இரத்தாசயம் லூயியின் உடலுக்குள் உயிரோடிருக்கிறது.

தர்வாலின் ஸ்தூல சரீரத்தில் பெரும்பகுதியும் லூயியின் இரத்தாசயமும் செத்துவிட்டபடியால் இப்பொழுது உயிரோடிருப்பது யார் என்று கேட்கிருர் கோவூர்!! தர்வாலா லூயியா?

இவர்களிருவருக்கும் ஆன்மா என்பதாக ஒன்றிருந்தால் இப்பொழுது யாருடைய ஆன்மா யாரிடம்இருக்கிறது? தர்வாலின் ஆன்மாவின் ஒருபகுதி லூயியிடம் இருக்கிறதா? அல்லது லூயியின் இரத்தாசயத்துடன் அவருடைய ஆன்மாவும் பிரிந்துவிட்டதா?

சத்திர சிகிச்சை வைத்தியம் முன்னேறிக்கொண்டு போகும்வேகத்தில், இனிமேல் வருங்காலத்தில், ஒருவர் 'இது என் மூக்கு, இது என காது' என்று கூறமுடியாதவகையில் பிறருடைய அவயவங்கள் அவரில் பொருத்தப்பட்டிருக்கலாம்.

ஏன், இப்பவே கண் முதலிய உறுப்புகள் இப்படி பொருத்தப்படுகின்றனவல்லவா? ஒருவருடைய இரத்தம் இன்னெருவருக்கு புகுத்தப்படுகிறது. கடைசியாக ஒருவருடைய இரத்தாசயத்தையே இன்னெருவரில் பொருத்திவிட்டார்கள்.

இப்படிபிறருடைய அவயவங்களைப் பொருத்திவாழும் ஒருவர் இன்ன சாதி என்று கூறமுடியுமா? தாழ்ந்த சாதி என்று கூறப்படுபவர் ஒருவரின் இரத்தம் மேல் சாதியினருக்கு புகுத்தப்பட்டால் அவர் தொடர்ந்து மேல்சாதிதானு? கறுத்தவரின் இரத்தாசயம் வெள்ளையருக்கு பொருத்தப்பட்டால் வெள்ளையர் தொடர்ந்து வெள்ளையர் தானு?

லூயிவஸ்கன்ஸ்கி இப்பொழுது பெண்ணு, ஆணு?

விஞ்ஞான வைத்தியம் சாதி, சமயம், நிறம், இனம் என்ற வேற்றுமைகள் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்குவதை கண்கூடாக காண்கிறோம்.

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

---

## பஸ் சேவை

ஊர்காவற்றுறை, செவ்.

நிறுத்தப்பட்டபஸ்சேவை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரோட்டுக்களைப் பிளந்து வெள்ளம் ஓடுவதற்கு வழியமைத்தமை காரணமாகப் பலஇடங்களில் பஸ் போக்குவரத்து தடைப்பட்டது. பாதைகள் திருத்தப்பட்டு தொடர்ந்து பஸ்சேவை நடைபெற்றுவருகிறது.

# ..த்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ..ஆபத்தான நோய்களை ..டுக்கசில யோசனைகள்

..வலி பிரயோக போசனத் திட்டத்தில் ..ுப்பதிகாரியாகக் கடமையாற்றும் .. எஸ். வீரசிங்கம், வெள்ளத்தால் ..கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் ..ஷ்டிக்கவேண்டிய அவசியமான சில ..னைகளைத் தெரிவித்திருக்கிருர்.

.. பெய்த பெரு
..மக்கள் வீடு
..ிழந்தது மட்டு
..ஷ்டங்களையும்
..வருகின்றனர்.
..டிந்துகொண்டி
..மழை ஓய்ந்து
..ஆயினும் வெள்
..பாதிக்கப்பட்ட
..விழுங்குவதற்கு
..ந்த நோய்கள்
..ர் த்துக்கொண்
... இந்தநோய்
.. இவற்றைத்
..றியும் சிலயோச
..த் தரப்படுகின்

..ுக் காய்ச்சல்.
..ருட்டம்,
..ழைவு.
.. தடிமல்.
..5
..யும்

.. நீரெடுக்கும்
..கு 1000 கல
.. அவுன்ஸ் என்ற
..குளோரின் பவுடர் கலக்கவேண்டும்.

(உங்கள் பகுதியிலுள்ள சுகாதார பரிசோதகரிடம் குளோரின் பவுடரை இலவசமாகப் பெற்று அவர்களின் ஆலோசனையோடு பாவிக்கவும்.)

2. தண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறியபின் குடிக்கவேண்டும்.

3. நாம் உண்ணும் இலைவகைகளையும் கறிவகைகளையும், கொதித்த நீரில் அவித்தல் அல்லது கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெயில் பொரித்தல் வேண்டும்.

4. பழவகைகளை தோல் அகற்றுமுன் நன்ருக தண்ணீரில் கழுவவேண்டும்.

5. சிப்பி, மீன்வகைகள், தாராமுட்டை முதலியனவற்றைத் தவிர்க்கவேண்டும்.

6. சுகாதார முறையில் தயாரிக்கப்படாத 'ஐஸ்' பழத்தை தவிர்க்கவேண்டும்.

7. போசன சாலையில் ஈ மொய்த்திருக்கும் உணவுகளைத் தவிர்த்தல்.

8. அசுத்தமானேர் அளைந்து தயாரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்க்கவேண்டும்.

9. ஈ உண்டாகாவண்ணம் குப்பைகூளங்களைப் புதைக்க வேண்டும்.

10. இறந்த ஆடு. மாடு போன்ற மிருகங்களையும். கோழி, தாரா போன்ற பறவைகளையும், எலி. அணில், பாம்பு போன்றவைகளையும், உடனடியாக நீர் தேங்கா இடத்திலும், குடிக்கும் நீர் எடுக்கும் கிணற்றுக்குத் தூரமான இடத்திலும் புதைக்க வேண்டும்.

11. துர்நாற்றத்தை அகற்ற சாம்பிருணி புகைக்க வேண்டும்.

12. குளிகளில் தேங்கிநிற்கும் நீரை அகற்றுதல் அல்லது மண்போட்டு நிரப்புதல் வேண்டும்.

13. மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் இரத்தப் பரிசோதனை செய்வித்தல் வேண்டும்.

14. பாலை நன்ருககொதிக்கவைத்துக் குடிக்க வேண்டும்.

15. உணவு உண்பதற்கு முன் கைகளை நன்ருக சவுக்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

16. நெருப்புக் காய்ச்சல் தடைமுறைஊசியை உடனே பாய்ச்சுதல் வேண்டும்.

## யாழ்ப்பாணத்தில் அரைச்சாப்பாடு ரூ. 1-75

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள சாப்பாட்டு கடைகளில் நேற்று சாப்பாட்டின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அரிசித் தட்டுப்பாடு தான் இந்த விலையேற்றத்திற்கு காரணம் என கடைக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு பிரபல கடையில் அரைச்சாப்பாடு நேற்று ரூ 1-75 சதமாக அதிகரிக்கப்பட்டிருந்தது. இக்கடையில் அரைச்சாப்பாடு முழுச்சாப்பாடு எல்லாம் ஒரே விலைதான்.

மற்றக்கடைகளில் முழுச்சாப்பாடு ரூ.1-60 சதம் வரை உயர்த்தப்பட்டிருந்தது. சைவச்சாப்பாடு ரூ. 1-50 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சோற்றுச் சாப்பாட்டின்விலை நேற்று அதிகரிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பலர் சாப்பாட்டிற்குப்பதிலாக பாண், ரொட்டி, இடியப்பம், தோசை சாப்பிட்டனர்.

அரிசியின்விலை அதிகரித்திருப்பதோடு கடைஊழியர்களின் சம்பளம் கூட்டப்பட்டிருப்பதால் சாப்பாட்டின் விலையை கூட்டுவதைத்தவிர வேறுவழியில்லையென மற்ருெரு கடைக்காரர்தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நூலகசேவை இயங்கும்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையிலுள்ள நூலகங்களைச் செம்மையான முறையில் இபக்கவும், அவற்றின் தரத்தை அகில உலக பொதுஜன நூல்நிலையங்களின் நிலைக்கு உயர்த்தவும் இலங்கைக்கென ஒரு தனிப்பட்ட நூலகசேவை அமைக்கப்படவிருக்கிறது.

இதுபற்றிய பூர்வாங்கநடவடிக்கையாக ஒரு மகாநாடொன்று இம்மாதம் 12-ந் திகதி கொழும்பில் ஆரம்பமானது, இம்மகாநாடு 19-ந் திகதி வரை தொடர்ந்து நடைபெறும். இதில் உலகின் பலபாகங்களிலுமுள்ள நூலக நிபுணர்கள் பலர்கலந்து மேற்குறிப்பிடப்பட்ட நூலக விருத்தி பற்றி ஆராய்ந்து வருகின்றனர் இம்மகாநாட்டின்விளைவாக பொதுஜன நூலகசேவை, பாடசாலை மாணவ நூலகசேவையென இரு பகுதிகளாகப் பிரித்து இலங்கையின் நிலைக்கமைய அவற்றை இயக்குவதற்குரிய வழிவகைகள் பெறப்படுமெனத் தெரிகிறது —— நி

## எம். பி. க்கு மகஜர்

சுழிபுரம், திங்கள்

அடுத்த வருடத்திலிருந்து பண்ணாகம் மெய்கண்டான வித்தியாசாலை மகாவித்தியாலயமாக்கப்படவிருப்பதாகவும், இதனை விரும்பாத பலர் தரஉயர்வைத் தடுக்கும் முயற்சியிலீடுபட்டுவருவதாகவும். எனவே இதன் காரணமாகத் தரஉயர்வு எவ்விதத்தும் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறும் பண்ணாகம் தெற்கு மக்கள் முன்னேற்ற மன்றத்தினர் வட்டுக்கோட்டை எம. பியை ஒரு மகஜர் மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர். மகஜரின் பிரதிகள் கல்வி அமைச்சருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**புதன் 13-12-67**

செய்திகள்! காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-25 திருவெம்பாவை — வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-55இஸ்லாமியநற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் & 49 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 குரல்வகை, 5-45 பாங்கு.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 கிராம சஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 வீணை—சிட்டி பாபு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி—எஸ். பரம் தில்லைராசா. ——

## நிலைமை சீரடைகிறது

கோப்பாய், செவ்.

கோப்பாய் பகுதியில் வெள்ள நிலைமை சீரடைந்து வருகிறது. இங்குள்ள பாலத்தின் மேலாக பாய்ந்த வெள்ளம் கட்டுக் கடங்கி விட்டது. மழை காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இப் பகுதியில் மழை, வெள்ளம், காற்று ஆகியவற்ருல் பாதிக்கப்பட்ட சுமார் 600 குடும்பங்களுக்கு 6500 இருத்தல் அரிசியும், 4000 இருத்தல் மாவும் கிராம சேவை யாளர்கள் திரு. சி. ஆறுமுகம். திரு. சு. யோகலிங்கம் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இலவச விநியோகம் நடைபெற்றது

## வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

சங்கானை, செவ்.

தொடர்ந்து பெய்தமழை காரணமாகக் கஷ்ட நிலையைச் சாதகமாக்கி உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்திருப்போர் மீதும், கூடுதல் விலைக்கு விற்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று வலி. மேற்குக் காரியாதிகாரி எச்சரித்துள்ளார்.

பொலிஸ், உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆகியோரையும் அடிக்கடிகடும் பரிசோதனை செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சில வியாபாரிகள் கட்டுப்பாட்டு விலையை மீறி மா இருத்தல் ஒன்று 40 சதமாக விற்பதாக அரசாங்க அதிபருக்குப் புகார் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## பரீட்சைக்கு தோற்ற முடியவில்லை

புலோலி, செவ்வாய்

இன்றுதொடங்கி நடைபெறும் அரசாங்கத்தாரால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தராதர (சாதாரணம்) பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த வடமராட்சியைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலருக்கு இதுவரை பிரவேசப்பத்திரம் கிடைக்காததால், இவ் விண்ணப்பதாரிகள்பரீட்சை எழுதுவதைக் கைவிட்டுள்ளனர். ——

## மே. வங்காள . . .

[3-ம்பக்கத் தொடர்ச்சி]

குப் பதிலாக டாக்டர் பி. ஸி. கோஷின் ஆட்சியை நிறுவிய கவர்னரின் நடவடிக்கையை ஆட்சேபித்து வழக்கறிஞர் ஒருவரான திரு. பி. கே. தேய் என்பவரின் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கல்கத்தா உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது- இம் மனு மீதான விசாரணை நாளை ஆரம்பமாகும்.

## பூநகரிப் பகுதிக்கு நிவாரணப் பொருட்கள்

யாழ்ப்பாணம், புதன்

புயலினுலும், மழையினுலும், கடல் பெருக்காலும் பூநகரிப்பகுதியைச் சேர்ந்த நாச்சிககுடாக் கரையோர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு தங்கள் பொருட்களையும் வீடுவாசல்களையும் இழந்து கஷ்டப் படுகின்றனர். மண்டைக் கல்லாறு பாய்ந்துகொண்டிருப்பதால் அங்குள்ள கூப்பன் கடைக்குக் கூட உணவுச் சாமான்கள் வராமல் கஷ்ட மேற்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் 4, 5 நாட்களாகப் பட்டினியால் தவிக்கின்றனராம். பல்லவராயன் கட்டு கிராமச்சபைத்தலைவர் சி. முகமது அப்துல் காதரும் நாச்சிக்குடா கூட்டுறவுக் கடற்றெழில் சங்கத்தலைவர் மு.அப்துல் காதரும் செம்மங்குண்டு இராணுவ முகாம் மூலம் அவசரத் தந்தியில் தொடர்பு கொண்டும், அரசாங்க அதிபரை நேரில் கண்டும், வேரவில், பொன்னுவளிகராஞ்சி, வலைப்பாடு, பல்லவராயன் கட்டு, குமுளமுனை, நாச்சிக்குடா ஆகிய பகுதிகளுக்கு வெள்ள நிவாரணப் பொருட்களை இரண்டு லோஞ்சி மூலம் கொண்டு செல்வதற்குரிய ஒழுங்குகளைச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

## நஷ்டஈடு வழங்கவேண்டுமாம்

புலோலி, செவ்வாய்

வல்வைப்பட்டின சபை எல்லைக்குள் வெள்ளத்தினுலும் புயலினுலும் ஏற்பட்ட நஷ்டத்துக்கு சபைக்கு நஷ்டஈடு வழங்கவேண்டுமென வல்வைப்பட்டின சபைத் தலைவர் வி. இரத்தினவடிவேல் ஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகரிடம் கோரியுள்ளார்.

மின்சாரக் கம்பங்கள் முதலியவற்றிற்கு 5,000 ரூபாவும், வெள்ளத்தினுல் வீதிகளுக்கு ஏற்பட்டசேதத்திற்கு 6,000 ரூபாவுமாக மொத்தம் ரூபா 11,000 நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

## அகதிகள் பட்டியல்

### வல்வை ப. ச. தலைவர் கேட்டுள்ளார்

புலோலி, செவ்.

வெள்ளத்தினுலும், சூருவளியினுலும் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து கஷ்டப்படும் அகதிகளுக்கு அரிசி, மிளகாய். பருப்பு முதலியன இலவசமாக வழங்குமுகமாக வல்வை பட்டினசபைத்தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் வெள்ள அகதிகளின் மகஜரைத்தயாரித்துத்தருமாறு பட்டின சபை வேலை மேற்பார்வையாளர் திரு. மார்க்கண்டுவைக் கேட்டுள்ளார்.

## கைது செய்தனர்

புலோலி, செவ்.

மந்திகையிலுள்ள ஒரு தேநீர்க்கடையில்தீப்பெட்டி ஒன்றைக் கட்டுப்பாட்டுவிலையிலும் கூடுதல் விலைக்கு விற்றதாகத் திடீர் சோதனையிட்டபருத்தித்துறைபொலிசார் விற்பனையாளரைக் கைது செய்தனர்.

## விருந்து அளிப்பர்

புலோலி, செவ்.

ஸ்தலஸ்தாபன ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் மேற்படிப்புக்காக அடுத்த வருடம் கனடாவுக்குச்செல்லஇருப்பதையொட்டி வடபிரதேச உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் அன்னருக்கு ஒருவிருந்துபசாரம் அளிக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது,

## வீடுசேதம்: ஆட்கள் தப்பினர்

புலோலி, செவ்வாய்

கடும்மழையினுலும் காற்றினுலும் அன்னலை வடக்கிலுள்ள முருகையன் கோயிலுக்கு அருகாமையிலுள்ள சுப்பிரமணியம் என்ற ஆசிரியரின் வீட்டின் மீது இரு உயரிய பனைகள் விழுந்ததால் வீடுபலத்த சேதமுற்றது. வீட்டிலிருந்தோர் மயிரிழையில் உயிர்தப்பிப் பிழைத்தார்கள்.




அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

# சாம்பியன்கிண்ணம் யாருக்கு?

## இரு பிரிவில் 18 கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினரின் ஆதரவில் 10-வதுவருடாந்த உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. இம்முறை முதற் பிரிவில் 9 கோஷ்டிகளும் இரண்டாம் பிரிவில் 9 கோஷ்டிகளுமாக மொத்தம் 18 கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன. முற்பகுதிப் போட்டிகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்திலும் பிற்பகுதி ஆட்டங்கள் கட்டுவன் விளையாட்டுத் திடலிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரு பிரிவுகளிலும் சாம்பியன் கோஷ்டிகளாகத் திகழும் கழகங்களுக்கு வெற்றிக் கேடயங்கள், கிண்ணங்கள் பரிசுகளாக வழங்கப்படும். சாம்பியன் ஆட்டம் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறலாமெனத் தெரிகிறது.

சுற்றுப் போட்டியில் பங்கு பற்றியுள்ள கழகங்களின் விபரம் வருமாறு:-

முதற்பிரிவு "ஏ" தொகுதி- இணுவில் இந்து விளையாட்டுக் கழகம், தெல்லிப்பழை ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், மாவிட்டபுரம் மத்திய விளையாட்டுக் கழகம், குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம், குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம்.

"பி" தொகுதி தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகம், சுன்னாகம் ரெக்கற் விளையாட்டுக் கழகம், ஈவினைபறக்கும் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

இரண்டாம் பிரிவு "ஏ" தொகுதி- ஊறணி சென் அந்தனீஸ் இளைஞர் கழகம், போயிட்டி மகாஜன விளையாட்டுக் கழகம், மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகம், ஏழாலை றெட் டவமன்ஸ் விளையாட்டுக் கழகம், குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம்.

"பி" தொகுதி- ஊரங்குணை விவேகானந்தா விளையாட்டுக் கழகம், ஏழாலை பாலர் விளையாட்டுக் கழகம், உரும்பராய் விளையாட்டுக் கழகம், குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம்.

## "முற்பணம் வழங்குக"

யாழ்ப்பாணம், புதன்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு கஸ்ட நிவாரண நிதியாக மூன்று மாத சம்பளம் முற்பணமாக வழங்கும்படியும் மழை காரணமாக அரசாங்க திணைக்களத்திற்கு செல்லாத நாட்களை வேலைக் கால லீவாகக் கருதும்படியும் கோரி யாழ்ப்பாண அரசாங்க எழுதுவினைஞர் கிளை நிதிமந்திரிக்கு ஓர் அவசரக் கடிதம் எழுதியுள்ளது.

## கிணற்றில் தவறி விழுந்து மரணம்

சுழிபுரம், செவ்.

தொல்புரம் கொட்டயாவத்தையைச் சேர்ந்த எஸ். வயிரவன் [வயது 55] தண்ணீர் அள்ளும்போது கிணற்றில் வீழ்ந்து மரணமானார். இவரின் மரணம் சம்பந்தமாக வலிகாமம் மேற்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சேனாதிராசா விசாரணை நடத்தினார். தவறுதலாக விழுந்ததால் தான் மரணம் ஏற்பட்டது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீவுப்பகுதியில்

## லைடன்கிண்ணசுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

தீவுப் பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் லைடன் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடைபெற்று முடிந்த சிலபோட்டி முடிவுகள் பின்வருமாறு:-

மண்டைதீவு விளையாட்டுக்கழகத்துக்கும்காரைநகர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் காரைநகர் விளையாட்டுக் கழகம் 8-0 கோல்களால் மண்டைதீவுக் கோஷ்டியை வென்றது. இப்போட்டியில் தோல்வியுற்ற மண்டைதீவுக்கோஷ்டியினர் 7 வீரர்களுடனேயே போட்டியில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. திரு. என். தேவபாலன் மத்தியஸ்தராகக்கலந்துகொண்ட இப்போட்டியில் சென். அன்ரனிஸ் பாடசாலை அதிபர் திரு. ஸ்ரானிஸ்லோஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

புங்குடுதீவுக்கோஷ்டிக்கும் நயினாதீவு விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் புங்குடுதீவுக் கோஷ்டியினர் நயினாதீவுக் கோஷ்டியை 1—0 கோலால் வென்றனர். இப்போட்டியில் நயினாதீவுக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரரின் ஆட்டம் அருமையாக இருந்தது. கட்டத்துக்குக் கட்டம் நயினாதீவுக் கோஷ்டியின் ஆட்டம் நன்றாக இருந்த போதும் பல கோல்கள் போடும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிக்கு திரு. எஸ். நவரத்தினராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இப்போட்டியை அடுத்து ஊர்காவற்றுறை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகமும் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் போட்டியிட்டன. இப்போட்டி முடிவில் இரு கோஷ்டியினரும் தலா ஒவ்வொரு கோல் போட்ட காரணத்தினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டியில் யங்ஸ்டாரிஸ் கோஷ்டியைச் சேர்ந்த சேவியரும் செல்வரத்தினமும் நன்றாக ஆடினர். இப் போட்டிக்கு திரு. பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (வி. நி)


# பயிர்ச் செய்கைக்கு உதவும் டிராக்டர் சாரதி இவர்






நெல முதலான உணவுப பொருள்களுக்கெல்லாம் எங்கள் நாட்டு மக்கள் எப்பொழுதும் பிற நாடுகளையே நம்பியிருக்கும் நிலை மாற வேண்டும் இலங்கையின் பல பாகங்களிலும் கிடக்கின்ற காடுகளை அழித்து, நிலம் திருத்தி உழுது புண்படுத்திப் பயிர்ச் செய்கை செய்வதற்காக நாள் முழுவதும் தூங்காமல் உழைப்பவர் இவர் இவரும் இவரைப் போன்ற பிறரும் அயராமல் உழைத்தால், இலங்கை பழையபடி கிழக்கு நாடுகளின் தானியக் களஞ்சியம் என்னும் நிலைக்கே வந்து விடும் இந்த வகையில் உழைக்கின்ற இவரது பணி எவ்வளவு முக்கியமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும் — மணத்துக்கும் குணத்துக்குமாக — எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்.

## இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்

LT. 2-67 AJNS



மாவிட்டபுரம் குருக்கள் கூறுகிறார்கள்:

இறைவன் திருமேனியை

## சந்தனக்காப்பிட்டு

அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக உபயோகிக்கவும் உகந்தது உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும் அத்தகைய சுத்தமான

## பச்சை சந்தனம்

யாழ்ப்பாணம் 73, மின்சார நிலைய வீதியிலுள்ள

## சுந்தரம் பிறதர்ஸ்

ஸ்தாபனத்தில்

எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்குசெய்திருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும்.



# நீங்கள் கேளுங்கள்!

சிங்கம் மார்க்

LIONBRAND SANDANADI THYLAM • சிங்கமார்க் •

## சந்தனதித் தைலம்

வாங்கி உபயோகியுங்கள், எங்தும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:- போன 23008-93050

## ப.மு.கசன்ஸ்.

88, செட்டியார் தெரு, கொழும்பு-11

## ஈழவள நாட்டிலே எங்குமே கிடைக்கும்!!

யாழ்ப்பாண மாவட்ட ஏஜண்ட்:

என். எம். எஸ். அன்ட் பிறதர்ஸ்,

கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம், வடமராட்சியில்

# வீடுகள் சேதத்தால் ரூ. 10,000 நஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை ஆகிய இருவரும் வடமராட்சி, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய காரியாதிகாரிகளின் பிரிவுகளுக்கு விஜயம்செய்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரடியாகப் பார்வையிட்டனர்.

மேற்படி இடங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுவீடுவாசல்களை இழந்த குடும்பங்களைக் கணக் கெடுத்து அக்குடும்பத்தினருக்கு மேலதிக பணஉதவி அளிக்கப்பட வேண்டுமென இவர்கள் அரசாங்கத்திற்குச்சிபாரிசு செய்துள்ளனர். உத்தேச மதிப்பீட்டின்படி வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் 10 இலட்சம் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது.

[நி]

# இவர்களுக்கு மாற்றமில்லை

யாழ்ப்பாணம், செவ்.
கல்விப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பாடசாலைகளின் தரமுயர்த்துவதற்காக பதவி உயர்வு வழங்கப்பட்ட ஆசிரியர்களின் சேவை பெரும்பாலும் வித்தியாபகுதிக்குத் தேவையாக இருப்பதாகவும், இதன் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் ரத்துச்செய்யப்படலாமென்றும் தெரியவருகின்றது.

கல்விப் புனரமைப்புத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஆரம்ப ஏற்பாடுகளை இப்பொழுது செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் படிப்படியாகச் செய்யப்படுவதாகவும் அறியப்படுகின்றது. இத்திட்டத்தைச் சிறப்பாகக் கல்வி அமைச்சின் சிபார்சுகளுக்கும், ஆலோசனைகளுக்கும் இணங்கசெயல்படுத்துவதில் வடமாநில கல்விவித்தியாதிபதி திரு. ஸி.ஏ. ஞானசேகரம் அதிக ஆர்வம்காட்டி வருவதாகவும், இது சம்பர்தமாக கல்விப்பகுதி உயர் அதிகாரிகளுடனும், தலைமை ஆசிரியர்களுடனும் அவர் ஆலோசனைகள் நடத்துவதாகவும் தெரிகிறது.

வடமாநில வித்தியாதிபதி பதவியைப் புதிதாக ஏற்றுள்ள திரு. ஞான சேகரம் தமது அலுவலக நிருவாக வேலைகள் தாமதமில்லாது சுறுசுறுப்பாக நடைபெறுவதற்குப் புதிய பல நிருவாக ஒழுங்குகளை வகுத்துள்ளதுடன், பாடசாலை, கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் தத்தமக்குள்ள பிரச்னைகளைத் தமது கவனத்திற்குக் கொண்டு வரும்பொழுது அவற்றின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்குப் புதிய பல நிருவாக ஒழுங்குகளை வகுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## சர்வதேசப் பொருட்காட்சி

மாஸ்கோ, டிசெ. 11
சர்வதேசப் பொதுப் பாவனை யந்திர உபகரணப் பொருட்காட்சி ஒன்று மாஸ்கோவிலுள்ள ஸொகல்னிகி நந்தவனத்தில் 1968ல் நடைபெறும்.

இப்பொருட்காட்சி புதிய நகரத்தையும் அதன் பல்வேறு நுட்பமான பாவனைச் சாதனங்களையும் பற்றியதாக இருக்கும்.

நீர் விநியோகம், நீர் சுத்தப்படுத்துதல் அமைப்பு, சாக்கடை அமைப்பு, நகர மின்சாரப் போக்குவரத்துச் சாதனங்கள், 'காஸ்' சாதனங்கள், 'காஸ்' சேவை அமைப்பு ஆகியன காட்சியில் இடம்பெறும்.

நகர மின்சார வெளிச்ச அமைப்பிலும், சலவைச் சாலைகளிலும், சிகையலங்கரிப்பு நிலையங்களிலும் பயன்படுத்தும் மின்சார சாதனங்களும், உபகரணங்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

இந்தச் சர்வதேசப் பொருட்காட்சியில் சோவியத் மண்டபம் மிகப் பெரிய மண்டபங்களுள் ஒன்றாக இருக்கும். பொதுப்பாவனை யந்திர உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கும் இயக்குவிப்பதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பாக உள்ள 54 மந்திரி இலாகாக்களும், சபைகளும் இப்பொருட்காட்சியில் பங்குபற்றவிருக்கின்றன.

உணவுப்பொருள்

## இலவசவிநியோகத்தில் பாரபட்சம்?

சங்கானை, திங்கள்
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் நிவாரண உதவிகளில் பலத்த பாகுபாடு இருப்பதாக பொது மக்களிடையே அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் அரிசி, மா, சீனி, தேயிலை முதலியன வழங்கப்படும்போது வலி-மேற்குப்பகுதியில் அரிசியின்றி ஏனைய பொருட்கள் மட்டும் வழங்கப்படுவதாகவும் வலி-மேற்குக் காரியாதிகாரி பகுதியில் கூட விநியோக முறை இடத்திற்கிடம் வேறுபட்டுள்ளதாகவும் சங்கானைப் பகுதியில் சங்கானை கிழக்கு மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் ஒரு கூப்பனுக்கு 2 இருத்தல் மாவும் 1/2 இருத்தல் சீனியும் 6 அவுன்ஸ் பருப்பும் 1 அவுன்ஸ் தேயிலையும வழங்கும் அதே நேரம் சண்டிலிப்பாய் பகுதியில் ஒருவருக்கு 1/2 இருத்தல் மா மட்டும் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலவச உணவு விநியோகங்களை தனிப்பட்ட வியாபாரிகளிடம் ஒப்படைக்காமல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கும்படி பொதுமக்கள் அதிகாரிகளை வேண்டியுள்ளனர்.

## தவறிவிட்டது

டிக்கி கைபிடி
EL 448 இலக்கராக்சியின் டிக்கிகைபிடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ராணி தியேட்டர் அருகாமையிலுள்ள நாதன் ஸ்ருடியோவில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
2174

## சிலரின் இடமாற்றம் ரத்தாகும்?

புன்னாலைக்கட்டுவன், திங்கள்
தமிழ் எம். பி. ஒருவரின் தலையீட்டால் சில ஆசிரியரின் இடமாற்றம் ரத்தாகும் என்றும், குறிப்பிட்ட அவ்வாசிரியர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று அவரிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. இந்நிலையில் இதர தமிழ் எம். பி.க்களும் இடமாற்ற விடயத்தில் தலையிடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிகிறது.

## முல்லைத்தீவு காரியாதிகாரி நடவடிக்கை

முல்லைத்தீவு, செவ்.
முல்லைத்தீவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எஸ். கணேசநாதன் முல்லைத்தீவுக் கிராமசேவையாளர் திரு. பி. திருநாவுக்கரசுவின் உதவியுடன் சென்ற இரு தினங்களாக மா, சீனி முதலிய அத்தியாவசிய உணவுப் பொருட்களான ஆயிரக்கணக்கான பெர்மிட்டுகளை வழங்கினார். மேலும் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களின் இடங்கட்கு உடனுக்குடன் சென்று பார்வையிட்டு அவர்களின் பட்டியலைத் தயாரிக்கும்படி ஊழியரைப் பணித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளைலாபமடித்த இரு வெங்காய வியாபாரிகளை கடும் எச்சரிக்கை செய்ததுடன் பஜாரில் உள்ள சகல கடை உரிமையாளர்களையும் எச்சரிக்கை செய்துள்ளார்.

## பொலிஸ் விடுதியில் 3 அடி தண்ணீர்

முல்லைத்தீவு, செவ்.
முல்லைத்தீவில் ஏற்பட்ட வெள்ளத்தில் முல்லைத்தீவுப் பொலிஸ் விடுதி சிக்கியதால் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பொலிஸ் நிலையத்தில் மிகவும் நெருக்கடியான நிலையில் தங்கியிருந்து நேற்று முன்தினம்தான் தங்கள் விடுதிகளுக்குச் சென்றனர். பொலிஸ் விடுதி மிகவும் பள்ளமான இடத்தில் உள்ளதால் தண்ணீர் 3 அடிவரை நின்றது.

## வடமராட்சியிலும் இலவச விநியோகம்

புலோலி, செவ்வாய்
கடந்த சிலதினங்களாக இடைவிடாது பெய்தமழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு வடமராட்சிக்காரியாதிகாரி இலவசமாக, மா, சீனி, மிளகாய், உப்பு போன்ற பொருட்களை வழங்க ஏற்பாடு செய்தார்.


நியூ காஸிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர், விஜயலட்சுமி
நடித்த
இரு வல்லவர்கள்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Vincent Price, Susan Hart
in
Dr. GOLD FOOT &
THE BIKINI MACHINE

REGAL JAFFNA
Daily at 10-30 A. M.
4-45, 7-00 & 9-45 P.M.
SEAN CONNERY
AS Agent 007
in
GOLDFINGER


## மூன்று பகுதிகளே...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
மடைந்துள்ளனரென்றும், மிகக் குறைவானவர்களே திரும்பவும் தங்கள் வீடுகளுக்குச் சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

கொடிகாமத்தில் சுமார் 80 குடும்பங்கள் பாடசாலைகளிலும் புகையிரதநிலைய குட்செட்டிலும் ஆஸ்பத்திரியிலும்வசித்துவருகின்றனர். கிராமசேவகர்கள் புள்ளி விபரங்களைச் சேகரிக்கும் வேலைகளை நேற்று ஆரம்பித்தனர்.

# பருத்தித்துறை பகுதியில் 4,375 குடும்பங்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாண மாவட்டத்தில் பல காரியாதிகாரி பிரிவுகளிலிருந்தும் வெள்ள அகதிகளின் புள்ளி விபரங்கள் சமூக சேவை பகுதிக்கு அனுப்பப்பட்டுவருகிறது. இப்புள்ளி விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

பருத்தித்துறைப்பகுதியில் 4375 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு இலவசமாக மா, சீனி, உப்பு வழங்கப்பட்டதாகவும்பருத்தித்துறை காரியாதிகாரி புள்ளி விபரங்களை அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் இலவசமாக மா, சீனி, உப்பு வழங்கப்பட்டுவிட்டதாகவும், யாழ்ப்பாண நகரத்தில் மட்டும் நிவாரண வேலைகள் அவசரமாக நடைபெற்ற காரணத்தால் கூப்பன் புள்ளி அறவிடாமல் ஒருவார அரிசி வழங்கப்பட்டதாகவும், அதற்கான கூப்பன்புள்ளி அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளப் ........

1-ம் பக்கத் தொடர்ச்சி
வெள்ள நிவாரண வேலைகளை விரைவில் முடிக்கும் படியும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்கள் திரும்பவும் வீடுகள் கட்டுவதற்கு வசதியாக கூடிய கெதியில் பண உதவியைச்செய்யுமாறும் யாழ்ப்பாண எம். பி. அரசாங்க அதிபரை கேட்டுக்கொண்டார். நிவாரண வேலைகள் திருப்தியளிப்பதாகவும் திரு பொன்னம்பலம் தெரிவித்தார்.

## வெங்காயம்...

[1-ம் பக்க தொடர்ச்சி)
களின்வெங்காயமும் கடைசி இரண்டு மாதத்திற்கும் தீவுப்பகுதியின் வெங்காயமுமே உபயோகத்தில் இருந்திருக்கும் என்றும் வெள்ளத்தினால் ஏனைய பகுதிகளைவிட தீவுப்பகுதியே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் விபரங்கள் கோரி வெள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்குமாறும் திரு. நவரத்தினம் அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொண்டார்

(வி. நி.)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
2-30, 6-30, & 9-30 p. m.
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன்
[பண்டாரவளை]
திரை உலகிலே என்றும் கண்டிராத புதுமைக்கதை!
உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்!
இனிமைமிகு கருத்து. கடைசிவரை பார்ப்போரின்
மனதில் ஐயத்தை தோற்றுவிக்கும் கதையமைப்பு!
சந்திரபாபு புதுமையான பாத்திரமேற்று நடித்து
டைரக்ட் செய்த உன்னத சித்திரம்.!



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனோகர் - விஜயஶ்ரீ
ராஜன்- "சோ" நம்பிராஜன்
ஸிடன்ப் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்
தட்டுங்கள் திறக்கப்படும்
திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 13-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org